APRIL/MAY 2024

CLT20/FLT20 — தமிழ் II

Time : Three hours Maximum : 75 marks

LIBRARY

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. அச்சோப்பதிகம் பெயர்க்காரணம் கூறுக.

2. சூலை நோயால் பாதிக்கப்பட்டவர் யார்?

3. கற்பூரம் நாறுமோ? கமலப்பூ நாறுமோ? என்று ஆண்டாள் யாரிடம் கேட்கிறாள்?

4. குலசேகரன் எதனைப் பெருஞ்செல்வமாகக் குறிப்பிடுகின்றார்?

5. கிளியின் வேறுபெயர்களைக் குறிப்பிடுக.

6. முக்கூடல் என்றால் என்ன?

7. ஊதாரிப்பிள்ளை இடம்பெறும் நூல் எது?

8. குணங்கடி மஸ்தான் சாகிபின் இயற்பெயர் யாது?

9. முதலாழ்வார்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

10. சீறாப்புராணத்தின் ஆசிரியர் யார்?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) திருவதிகைப் பதிகம் வழி திருநாவுக்கரசர் கூறும் கருத்துக்களை விளக்குக.

(அல்லது)

(ஆ) சிவபெருமானின் பெருமைகளாக மாணிக்கவாசகர் கூறும் செய்திகளை இயம்புக.

12. (அ) திருமாலின் சிறப்புகளாக ஆண்டாள் கூறுவனவற்றை நவில்க.

(அல்லது)

(ஆ) திருமாலின் இயல்புகளை நம்மாழ்வார் பாடல்கள் வழி விளக்குக.

13. (அ) தலைவி கிளியை அழகரிடம் தூது அனுப்பிய செய்தியை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) கடைத்திறப்பில் இடம்பெறும் செய்திகளை இயம்புக.

14. (அ) ஊதாரிப்பிள்ளை எனும் கதை வாயிலாக கண்ணதாசன் கூறும் கருத்துகளை நவில்க.

(அல்லது)

(ஆ) பட்டினத்தார் தன் நெஞ்சிடம் கூறும் செய்திகளை இயம்புக.

15. (அ) ஆளுமைமிக்க மாவட்ட ஆட்சியர் பற்றி நேர்காணல் செய்வது குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) கிறிஸ்தவர்கள் தமிழுக்கு ஆற்றியத் தொண்டு குறித்து எழுதுக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விரிவான விடை எழுதுக.

16. கல்வியின் சிறப்பு குறித்து திருமூலர் கூறுவனவற்றை எடுத்துரைக்க.

17. குலசேகராழ்வார் திருவேங்கடமலையில் கோயில் கொண்டுள்ள திருமாலிடம் வேண்டுவனவற்றை தொகுத்துரைக்க.

18. மூத்தப்பள்ளி இளையப்பள்ளியர் இடையே நடந்த ஏசல் செய்திகளை எடுத்துரைக்க.

19. குணங்குடி மஸ்தான் சாகிபு இறைவனிடம் வேண்டுவனவற்றை விரித்துரைக்க.

20. வைணவ சமய இலக்கியங்கள் பற்றி ஒரு கட்டுரை வரைக.

———————